


# 'சாணக்கியா ஏகே _15': வேலம்மாள் தொழில்நுட்பக் கல்லூரியில் தொழில்நுட்ப திட்ட கருத்தரங்கு

சென்னை, மார்ச். 22

வேலம்மாள் தொழில்நுட்பக் கல்லூரியின் கணினி பொறியியல் துறையில் தேசிய அளவிலான தொழில்நுட்பத் திட்ட கருத்தரங்கு 'சாணக்யா ஏ.கே. 15' நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் டாக்டர் டி. சந்திரசேகரன் தலைமை வகித்தார். கணிப்பொறி அறிவியல் துறைத் தலைவர் எல். மரிய மைக்கேல் விஸ்வாசம் வரவேற்றார். கல்லூரியின் ஆலோசகர் பேராசிரியர் ஆ. ரசாக் மற்றும் துணை முதல்வர் டாக்டர் எஸ். சவுந்தரராஜன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். வெரிசன் டேட்டா சர்வீசஸ் முதன்மை அதிகாரி ஆல்பிரட் தேவநேசன் சாமுவேல் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கணிப்பொறி அறிவியல் துறையில் புதிய கண்டுபிடிப்புகளின் பங்களிப்பும், அவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றியும் மாணவர்களுக்கு விளக்கினார்.

தமிழகம் மற்றும் பல்வேறு மாநிலங்களிலிருந்து பல்வேறு பொறியியல் கல்லூரிகளைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் தங்களது படைப்புகளை சமர்ப்பித்தனர். அவை சிடிஎஸ், அஸ்சென்றஸோ மற்றும் வெரிசன் ஆகிய நிறுவனங்களை சேர்ந்த தொழில்நுட்ப வல்லுநர்களால் பகுப்பாய்வு செய்யப்பட்டு சிறந்த படைப்புகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

இறுதியில் துணை பேராசிரியர் பிரவீன்குமார் நன்றி கூறினார்.